*1*

# பவுல் இல்லத்திற்கு எழுதிய போது

## (பிலிப்பியர் 1:1, 2)

நாம் கடிதங்களைப் பெறுவதற்கு விரும்புகிறோம், விசேஷமாக நாம் நேசிக்கிறவர்களிடத்தில் இருந்து அவற்றைப் பெறுவதற்கு விரும்புகிறோம். எனது குடும்பம் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருந்தபோது, நாங்கள் அஞ்சல்காரரை எதிர்பார்த்துக் கவனித்துக் கொண்டிருப்போம். அவர் வந்த பின்பு, அமெரிக்காவில் உள்ள குடும்பம் மற்றும் நண்பர்களிடத்தில் இருந்து ஏதேனும் செய்தி வந்துள்ளதா என்று பார்ப்பதற்காக அஞ்சல்பெட்டியை நோக்கி விரைந்தோடுவோம். இந்தப் பாடம் பிலிப்பியில் இருந்த சபைக்குப் பவுலின் நிருபம் என்ற அவரது "அன்புக் கடிதம்" பற்றிய ஒரு பாடத்தை தொடங்கி வைக்கிறது.

நமது படிப்பை நான், "மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்தவம்" என்று அழைக்கிறேன், மற்றும் இந்தக் குறிப்பிட்ட பாடத்திற்கு நான், "பவுல் இல்லத்திற்கு எழுதியபோது" என்று தலைப்பிட்டுள்ளேன். இந்த அறிமுகப் பாடத்தில் நாம், இந்தப் புத்தகத்தின் முதல் இரு வசனங்களைப் பற்றி முதன்மையாகப் பார்ப்போம்:

> இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும்,
>
> பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் காத்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக (வசனங்கள் 1, 2).

மேலும் நாம்,இந்த நிருபத்தைச் சுருக்கமாக ஆய்வு செய்வோம். இது நமது பாடத்தொடருக்கு ஒரு பின்னணியை அளிக்கும்.

### உண்மைகள்

வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களை வரிசை முறையில் ஆராய்வு செய்தல் என்பது 1 மற்றும் 2 வசனங்களை அணுகுவதற்கான ஒரு வழியாக உள்ளது. (ஆங்கில வேதாகமத்தில்) "பவுல்"[1] என்பது முதல் வார்த்தையாக உள்ளது. இவர் புறஜாதியாருக்கு மாபெரும் அப்போஸ்தலராக இருந்தார், இந்த நிருபத்தை எழுதிய வேளையில் இவர் அனேகமாக,ரோமாபுரி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு இருந்தார். சிறையில் அடைக்கப்பட்டு இருத்தலையும் (1:13) மரணம் அடைவதற்கான சாத்தியக்கூறு இருத்தலையும் (1:21-24)

பவுல் குறிப்பிட்டார். இந்த அப்போஸ்தலர், தாம் சிறையில் அடைக்கப்பட்டு இருத்தலானது, கிறிஸ்துவானவர் "அரண்மனை எங்கும் உள்ளவர்களால்" நன்கு அறியப்பட்டவர் ஆனார் (1:13) என்ற விளைவை ஏற்படுத்தியது என்று கூறினார். மேலும் இவர் "இராயனுடைய அரமனையிலுள்ளவர்களிடம்" இருந்து வாழ்த்துதல்களையும் அனுப்பினார் (4:22).

முதல் வசனத்தில் அடுத்ததாக "தீமோத்தேயும்" என்ற வார்த்தை வருகிறது. தீமோத்தேயு, பவுலின் பயணத்தோழராக இருந்து, இந்த நிருபத்தை எழுதியபோது பவுலுடன் இருந்த ஒரு இளம் பிரசங்கியாராவார். தீமோத்தேயுவின் பெயரை உள்ளடக்கியது, அவர் இந்த நிருபத்தின் உடன் எழுத்தாளராக இருந்தார் என்று அர்த்தப்படுவதில்லை; இந்தப் புத்தகம் முழுவதிலும் பவுல் தன்மை ஒருமைச் சொல்லையே பயன்படுத்தினார் (காண்க 1:3, 6-9, 12). மாறாக, இந்த அப்போஸ்தலர், அனேகமாக, தீமோத்தேயு தமது உடன் ஊழியக்காரராக இருந்தார் என்று வலியுறுத்தி இருக்கலாம் மற்றும் இவரது சொற்றொடர் அமைப்பானது, இவர் இந்த நிருபத்தைக் கூற, அவ்வார்த்தைகளைத் தீமோத்தேயு எழுதியிருப்பார் என்று சுட்டிக்காண்பிப்பதாக இருக்கலாம்.

பவுல் தம்மையும் தீமோத்தேயுவையும் "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள்" என்று அடையாளப்படுத்திக் கொண்டார். ஆங்கில வேதாகமத்தில் இது "bond-servants" என்றுள்ளது, இது "அடிமைகள்" என்று அர்த்தப்படுகிறது. KJV வேதாகமத்தில் "servants" என்று இருந்தாலும், கிரேக்க வேதாகமத்தில், "servant" என்று அர்த்தப்படும் வார்த்தையின் பன்மை வடிவம் (*diakonos*) அல்ல, ஆனால் "அடிமை" என்று அர்த்தப்படும் வார்த்தையே (*doulos*) உள்ளது. இவ்விடத்தில் இவ்வார்த்தையின் பயன்பாடு, இந்தச் சுவிசேஷ ஊழியர்கள் இருவரைப் பற்றியும் பல உண்மைகளைக் கருத்தாகத் தெரிவிக்கிறது: (1) அவர்களை இயேசு தமக்கு உரிமையானவர்கள் ஆக்கியிருந்தார். அவர்கள் "கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருந்தனர்" (1 கொரிந்தியர் 7:23). (2) அவர்கள் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர் மற்றும் அவரது சித்தத்தைச் செய்வதற்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தனர். (3) செப்துவஜிந்த் (பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பு) வேதாகமத்தில் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளபடி, அவர்கள் *மதிப்புள்ள* வேலைக்காரர்களாக இருந்தனர். இது, பவுல் தம்மை அப்போஸ்தலர் என்று அடையாளப்படுத்திக் கொள்ளாத சில நிருபங்களில் ஒன்றாக உள்ளது. ஒருவேளை இதை அவர் பிலிப்பியில் இருந்த சபைக்கு நிரூபிக்கத் தேவையில்லாது இருந்திருக்கலாம்.

இந்த நிருபம், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும்" எழுதப்பட்டது. "பரிசுத்தவான்கள்" என்பது "பாவமற்ற பரிபூரண நிலையை அடைந்தவர்கள்" என்று அர்த்தப்படுவது இல்லை. "பரிசுத்தவான்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை ("பரிசுத்தமானவர்கள்" என்பதற்கான வார்த்தையான) *hagios* என்பதன் நான்காம் வேற்றுமைப் பன்மைச் சொல்லாகும், இது "பிரித்து வைக்கப்பட்டவர்கள்" என்று அர்த்தப்படுகிறது. இவ்வார்த்தை தேவனுடைய ஊழியத்திற்கென்று "பிரித்து வைக்கப்பட்ட" "தேவனுடைய பரிசுத்தமான மக்கள்" என்பதைக் குறிக்கிறது.இது அந்தப் பகுதியில் இருந்த எல்லா கிறிஸ்தவர்களைக் குறிப்பிடுவதாக இருந்தது.

குறிப்பிட்ட இந்தப் "பரிசுத்தவான்கள்," "பிலிப்பி நகரத்தில் இருந்தவர்கள்"

என்று அடையாளப்படுத்தப்படுகின்றனர். பிலிப்பி என்பது மெக்கதோனியாவில் இருந்த ஒரு நகரமாகும்.[2] பிலிப்பி ஒரு பெரிய நகரமாக இராதபோதிலும், அது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகரமாக இருந்தது. மெக்கதோனியாவின் பிலிப்பு என்பவர், கிரேக்க நாட்டை ஒன்றிணைக்கும் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, இந்தப் பகுதியிலிருந்த தங்கத்தைப் பயன்படுத்தினார். அவர் இந்த நகரத்திற்கு தமது நினைவாக, "பிலிப்பி" என்ற மறுபெயரிட்டார். பல ஆண்டுகளுக்குப் பின்பு, ஆக்டேவியனும் அந்தோனியும், புரூட்டஸ் மற்றும் கேஸியஸ் ஆகியோரைக் தோல்வியடையச் செய்து, ரோமப் பேரரசின்மீதான கட்டுப்பாட்டை ஆதாயப்படுத்திக் கொள்ளுகையில் நடைபெற்ற, வரலாற்றின் மாபெரும் யுத்தங்களில் ஒன்று இவ்விடத்திற்கு அருகாமையில் நடத்தப்பட்டது. இந்த வெற்றியைக் கனப்படுத்தும் வகையில் பிலிப்பி நகரம் ரோமக் காலனியாக்கப்பட்டது (காண்க நடபடிகள் 16:12). இருப்பினும் இன்றைய நாட்களில் பிலிப்பி நகரம், அதன் வரலாற்று முக்கியத்துவத்திற்காக அல்ல, ஆனால் பவுல் என்ற பெயருடைய பிரசங்கியார், சுவிசேஷத்துடன் அங்கு சென்றதாலேயே முதன்மையாக நினைவுகூறப்படுகிறது (நடபடிகள் 16:6-40).

அடுத்ததாக, சபைக்குழுமத்தின் நடத்துனர்கள் குறிப்பிடப்படுகின்றனர்: "கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும்." KJV வேதாகமத்தில் "bishops" என்றுள்ளது. இது 1611ன் நாட்களில் மதரீதியான பெயரிடும் முறையிலிருந்து வசனத்திற்குள் வாசிக்கப்பட்டது. "கண்காணி" என்பது "மீது" (*epi*) என்ற முன்னிடைச் சொல்லுடன் "காணுகிற ஒருவர்" என்பதற்கான சொல்லை (*skopos*) இணைத்துப் பெற்ற கிரேக்கக் கூட்டுவார்த்தையாகும்.

"கண்காணிகள்" என்பது சபையின் மூப்பர்களைக் குறிக்கும் பெயர்களில் ஒன்றாக உள்ளது (காண்க நடபடிகள் 20:17, 28; தீத்து 1:5, 7; 1 பேதுரு 5:1, 2). சாதாரண மக்கள் புரிந்துகொள்ளும் சொற்றொடர்களைப் பயன்படுத்த முயற்சி செய்யும் NCV வேதாகமம், "overseers" அல்லது "bishops" என்பவைகளுக்குப் பதிலாக "elders" என்பதைக் கொண்டுள்ளது. NCV வேதாகமம். ஒரு நேரடி அர்த்தமான மொழிபெயர்ப்பாக இல்லை என்றாலும், இந்தச் சொற்றொடர், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில் மூப்பர்கள் சபையின் கண்காணிகளாக இருக்க வேண்டும் என்பதை மொழிபெயர்ப்பாளர்கள் புரிந்து கொண்டுள்ளதைச் சுட்டிக்காண்பிக்கிறது. "கண்காணிகள்" என்ற சொற்றொடர். மூப்பர்கள் கொண்டுள்ள பொறுப்பின் பரப்பெல்லையைச் சுட்டிக்காண்பிக்கிறது: அவர்கள் சபைக்குழுமம் தொடர்பான எல்லாவற்றையும் - குறிப்பாக தங்கள் கண்காணிப்பில் ஒப்புவிக்கப்பட்டுள்ள ஆத்துமாக்களை - கண்காணிப்புச் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர் (காண்க 1 பேதுரு 5:2; எபிரெயர் 13:17).

"உதவிக்காரர்கள்" என்ற வார்த்தை நேரடி அர்த்தத்தில் "வேலைக்காரர்கள்" என்று அர்த்தப்படுகிறது. "உதவிக்காரர்கள்" என்பது "வேலைக்காரன்" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் (*diakonos*) பன்மை வடிவத்தினுடைய ஆங்கிலப்படுத்தப்பட்ட வார்த்தையாக உள்ளது. இந்த சந்தர்ப்பப் பொருளில் இது, சபையில் மூப்பர்களுடன் மற்றும் மூப்பர்களின் கீழ் ஊழியம் செய்யும் விசேஷித்த ஊழியர்களைக் குறிக்கிறது (காண்க 1 தீமோத்தேயு 3:8-13).

இந்த நிருபத்தில் மாத்திரமே பவுல் தமது வாழ்த்துரையில் சபையின் நடத்துனர்களைத் தனிப்படக் குறிப்பிட்டார். ஒருவேளை பிலிப்பியர்களுக்கு அவர்கள் செய்த நிதிசார்ந்த உதவிக்காக நன்றி செலுத்துதல் என்பது

அவரது நோக்கங்களில் ஒன்றாக இருந்தது - மற்றும் சட்டப்படி, சபைக்குழுமத்தின் நடத்துனர்களே நிதிகளைப் பெறுதல் மற்றும் தருதல் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தனர் என்பதால் இவ்விடத்தில் அவர் இதைச் செய்திருக்கலாம்.

வாழ்த்துதல் பின்வரும் வார்த்தைகளுடன் முடிகிறது: "நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக." இது பவுலின் வழக்கமான வாழ்த்துதலாகும். இதே வார்த்தைகள், ரோமாபுரி, கொரிந்து, கலாத்தியா மற்றும் எபேசு ஆகிய இடங்களில் இருந்த சபைகளுக்கு அவர் எழுதிய நிருபங்களில் காணப்படுகின்றன. அவரது மற்ற நிருபங்களில் சற்றே மாறுபாடுகளுடன் இவை காணப்படுகின்றன. இந்த வாழ்த்து, "கிருபை" என்ற கிரேக்க வாழ்த்தையும் "சமாதானம்" (Heb.: *shalom*) என்ற எபிரெய வாழ்த்தையும் ஒன்றிணைத்ததாக உள்ளது.

## உணர்வு

உண்மைகள் பற்றிய முந்திய கலந்துரையாடலானது ஒரு விளக்கவுரையில் முதல் இரண்டு வசனங்கள் கையாளப்பட வேண்டியதாக இருக்கும் வழியைப் போன்றதாக உள்ளது. இருப்பினும் நான், பவுலின் திறவுக் கூற்றைவிட்டு இவ்வளவு விரைவாக வெளியேறி வருதல் என்பது அவரது வார்த்தைகளுக்குப் பின்னால் உள்ள உணர்வை - மன எழுச்சிகளை - தவறவிடுதலாக இருக்கும் என்று கருத்துத் தெரிவிக்கிறேன். 1:7ஆ வில் பவுல் "*உங்களை என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கிறபடியினாலே,* உங்களெல்லாரையுங்குறித்து நான் இப்படி *நினைக்கிறது* எனக்குத் தகுதியாயிருக்கிறது" என்று எழுதினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

### மன எழுச்சிகள்

பிலிப்பி நகரத்தில் இருந்த சபை, பவுலுக்கு விசேஷித்ததாக இருந்தது. அதைப் பவுலின் "இதயத்திற்கு இனிய சபை" என்று ஏவன் மலோன் என்பவர் அழைத்துள்ளார்[3]. இதன் உறுப்பினர்களை, "எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே ..." என்று 4ம் அதிகாரத்தில் அப்போஸ்தலர் குறிப்பிட்டார் (4:1). இந்த நிருபத்தில் பவுல், குளிர்ந்த தர்க்க வாதியாகவோ, ஆழ்ந்தறிவுள்ள இறையியலாளராகவோ அல்லது விசுவாசத்தை உணர்வுக் கிளர்ச்சியுடன் தற்காப்பவராகவோ இருக்கவில்லை. மாறாக அவர் தமது நண்பர்களுக்குத் தமது இருதயத்தில் இருந்து எழுதும் ஒரு மனிதராக இருந்தார். அதனால்தான் இந்தப் பாடத்திற்கு நான், "பவுல் இல்லத்திற்கு எழுதியபோது" என்று தலைப்பிட்டேன்.

"இல்லம்" என்ற வார்த்தையை நான் பயன்படுத்தும்போது,பவுல் பிலிப்பி நகரில் வளர்ந்தவர் என்று மறைமுகமாய் சுட்டிக்காண்பிக்க நான் நோக்கங்கொண்டிருக்கவில்லை. அவர் தர்சு நகரில் பிறந்து எருசலேமில் கல்வி பயின்றார் (நடபடிகள் 22:3). இருப்பினும் பவுல் தமது மனமாற்றத்திற்குப் பின்பு, பெருமளவில் உலகக் குடிமகன் ஆனார். அவர் விரிவான பயணம் செய்தார் - மற்றும் கிறிஸ்துவுக்குள் தமது சகோதர சகோதரிகள் எங்கெல்லாம் இருந்தனரோ அவையாவும் அவரது "இல்லமாக" இருந்தன. இவ்விஷயத்தில் நான் பவுலுடன்

உறவுமுறை ஒன்றை உணருகிறேன். நான் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில், எனது பெற்றோர்கள் அடிக்கடி இடம் மாறிக்கொண்டிருந்தனர்.மக்கள் என்னை, "உங்கள் இல்லம் எங்குள்ளது?" என்று கேட்கும்போது, சில வேளைகளில் நான், "ஆக்லஹாமாவின் பேன்ஹேன்டில் என்ற ஊரில் நான் பிறந்தேன், ஆக்லஹாமாவின் தென்மேற்கு மூலையில் நான் வளர்ந்தேன், மத்திய ஆக்லஹாமாவில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வி பெற்றேன், மேற்கு டெக்ஸாஸில் உள்ள கல்லூரிக்குச் சென்றேன், மற்றும் மத்திய மற்றும் கிழக்கு ஆக்லஹாமா, ஆஸ்திரேலியா, வடக்கு டெக்ஸாஸ் மற்றும் அர்க்கன்ஸாஸ் ஆகிய இடங்களில் பிரசங்கியாராகப் பணிசெய்துள்ளேன். ஆனால் எனது குடும்பத்தினரும் நண்பர்களும் எங்கு இருக்கின்றனரோ, அந்த இடமே எனது இல்லமாக உள்ளது" என்று பதில் அளிப்பதுண்டு.

## நினைவுகள்

"இருதயம் எங்குள்ளதோ அவ்விடமே இல்லமாக உள்ளது"[4] என்பது உண்மை என்றால், பிலிப்பி நகரத்தைப் பவுல் "இல்லம்" என்று சுலபமாக அழைத்திருக்க முடியும். பிலிப்பி நகரில் இருந்த பரிசுத்தவான்களுக்கு அவர் தமது நிருபத்தை எழுதத் தொடங்குகையில், பல ஆண்டுகளாகத் தாம் அவர்களுடன் கொண்டிருந்த தமது உறவு பற்றிப் பின்னோக்கி அவர் சிந்திக்கத் தொடங்கியதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.

ஒருவேளை அவரது சிந்தனைகள், சீலாவுடன் இணைந்து சபைக்குழுமங்களைத் திரும்பவும் சந்திக்கச் சென்ற, அவரது இரண்டாம் சுவிசேஷப் பயணத்துடன் தொடங்கி இருக்கலாம் (நடபடிகள் 15:36-41). லீஸ்திரா அல்லது தெர்பையில், அவர்களுடன் இளம் தீமோத்தேயு சேர்ந்து கொண்டார் (நடபடிகள் 16:1-5). பவுல், ஆசியாவின் ரோம மாகாணத் தலைநகரான எபேசுவுக்குச் செல்லும் ரோமானிய சாலையில் பயணம் தொடரத் திட்டமிட்டார். ஆனால் ஆவியானவரால் தடை செய்யப்பட்டார் (16:6). பின்பு அவர் வடக்கில் இருந்த பித்தினியாவுக்குச் செல்லத் தீர்மானித்தார், ஆனால் மீண்டும் அவரது வழி தடைசெய்யப்பட்டது (16:7). அவர் ஏஜியன் கடலின் மீதிருந்த கப்பல் துறைமுகமான துரோவாவுக்குச் செல்லும்படி ஆயிற்று (16:8). அங்கே அவர் தம்மிடத்தில் ஒரு மனிதன், "நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று" கூறிய தரிசனமான, "மக்கெதோனிய அழைப்பை" பெற்றார் (16:9). மருத்துவர் லூக்காவும் சேர்ந்து கொண்ட சிறு குழுவானது கடலினூடே பயணம் செய்து அதைக் கடந்து நெயாப்போலி என்ற ஊர் சென்று சேர்ந்தது (16:10, 11). அங்கிருந்து அவர்கள் உள்நாட்டில் பத்து மைல்கள் பயணம் செய்து பிலிப்பி என்ற நகருக்கு சென்று சேர்ந்தனர் (16:12).[5]

அவர்கள், ரோமப் பேரரசின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளுக்கு இடையில் முதன்மை வர்த்தகச் சாலைகளில் ஒன்றாக இருந்த ரோமாபுரியின் பொதுப்போக்குவரத்துச் சாலையான, அதிகப் போக்குவரத்து நிறைந்த, எக்நேத்தியன் சாலை வழியாகச் சென்று அந்த நகருக்குள் நுழைந்திருப்பார்கள். ஒரு குட்டி ரோமாபுரியாக இருந்ததால், பிலிப்பி நகரம் என்ற அந்த ரோமானியக் காலனி ஆவலுடன் விரும்பப்பட்டது. பவுல் நகருக்குள் நுழைகையில், அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு ஒரு புதிய எல்லைப்பகுதியில் நுழைந்தார். அவர் பிலிப்பி நகரிலும் அதற்கு அப்பால் இருந்த பகுதிகளிலும் தாம் செய்த

ஊழியத்தைக் குறிப்பிட, "நாள்முதல்" மற்றும் "சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே" என்பது போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தினார் (பிலிப்பியர் 1:3; 4:15).

பொதுவாகப் பவுல், ஒரு புதிய இடத்தில், அங்குள்ள ஜெப ஆலயத்திற்குச் செல்வதைக் கொண்டு தமது ஊழியத்தைத் தொடங்கினார்; ஆனால் பிலிப்பி நகரத்தில் இருந்த ஜனத்தொகையில், ஒரு ஜெப ஆலயத்தை நிலைநாட்டத் தேவையான பத்து யூதமனிதர்கள் உள்ளடங்கவில்லை, கடைசியில் அப்போஸ்தலர், நகருக்கு வெளியே நதியோரத்தில் ஆராதித்துக் கொண்டிருந்த பெண்கள் குழு ஒன்றைக் கண்டார் (நடபடிகள் 16:13). அங்கு அவர் போதித்து, லீதியாள் என்ற பெயருடைய ஒரு பெண்ணுக்கும் அவளது வீட்டாருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார் (16:14, 15), இவ்வாறாகப் பிலிப்பி நகரில் சபையை நிலைநாட்டினார்.

இதற்குச் சற்றுப் பின்பு பவுல், அடிமைப் பெண் ஒருத்தியிடம் இருந்த அசுத்த ஆவியைத் துரத்தியதற்காகக் கைது செய்யப்பட்டார் (16:16-21). அவரும் சீலாவும் அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர் (16:22-24). நள்ளிரவில் ஒரு பெரிய பூமியதிர்ச்சி உண்டாகி பவுலும் மற்ற கைதிகளும் கட்டவிழ்க்கப்பட்டனர் (16:25, 26). இந்தக் கட்புலக் காட்சியைச் சுற்றி நடந்த நிகழ்வுகள், அவர்களைச் சிறைவைத்திருந்த அதிகாரியின் மனதை மென்மையாக்கி அவருக்கும் அவரது வீட்டாருக்கும் போதித்து ஞானஸ்நானம் கொடுக்க ஒரு வாய்ப்பை முன்வைத்தன (16:27-34). இவ்வாறாக பிலிப்பியில் இருந்த சிறிய சபையானது புதிய உறுப்பினர்களை ஆதாயப்படுத்திற்று.

அடுத்த நாள் காலையில் பவுலும் சீலாவும் பட்டணத்து அலுவலர்களால் விடுதலை செய்யப்பட்டனர், ஆனால் அந்த நகரை விட்டு வெளியே சென்று விடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர் (16:35-39; காண்க 1 தெசலோனிக்கேயர் 2:2) பிலிப்பி நகரில் இருந்த புதிய கிறிஸ்தவர்களைச் சுருக்கமாகச் சந்தித்தபின்பு, பவுலும் சீலாவும் தீமோத்தேயுவும் ஊழியத்தைச் செய்யும்படி லூக்காவை அங்கேயே விட்டுவிட்டு புறப்பட்டுச் சென்றனர்.[6]

பவுல் ஒருசில வாரங்களுக்கு மேல் பிலிப்பி நகரில் இருக்க முடியாதிருந்தது; இருப்பினும் அங்கிருந்த கிறிஸ்தவர்கள் அவரது இருதயத்தில் ஒரு விசேஷித்த இடத்தைப் பெற்றிருந்தனர். அவர் அங்கிருந்து சென்றபின் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார் மற்றும் அவர்களும் அவருடன் தொடர்பு கொண்டிருந்தனர். பிலிப்பி நகரில் இருந்து பவுல் பிரசங்கிப்பதற்காகத் தெசலோனிக்கே நகருக்குச் சென்றார் (நடபடிகள் 17:1). அங்கு பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் அவருக்கு உதவி அனுப்பினர் (பிலிப்பியர் 4:15, 16). அடுத்ததாகப் பவுல் பெரோயா மற்றும் அத்தேனே நகரங்களில் சுருக்கமாக ஊழியம் செய்துவிட்டு, கொரிந்து நகருக்குச் சென்றார் (நடபடிகள் 17:10, 15; 18:1). மீண்டும் பிலிப்பி நகரத்தில் இருந்த சகோதரர்கள் அவரை ஆதரித்தனர் (2 கொரிந்தியர் 11:9). இந்த வடிவமைப்பு ஆண்டுகளினூடே தொடர்ந்தது (காண்க பிலிப்பியர் 1:5).

பவுல் தம்மால் இயன்றபோதெல்லாம், பிலிப்பி நகரில் இருந்த தமது சகோதர சகோதரிகளைச் சந்திக்க விசேஷித்த முயற்சி மேற்கொண்டார். அவர் தமது மூன்றாம் ஊழியப் பயணத்தில், எபேசு நகரில் சுமார் மூன்று ஆண்டுகள் இருந்த பின்பு, பிலிப்பி இருந்த இடமான மெக்கதோனியா பகுதிக்கு அவர்

*பயணமானார் (நடபடிகள் 20:1; 2 கொரிந்தியர் 2:13; 7:5). மூன்றாம் பயணத்தின் முடிவில் அவர் கொரிந்து நகரை விட்டு எருசலேம் நோக்கிப் பயணமானார். எருசலேமுக்கு நேரடியாக ஒரு கப்பலைப் பிடித்துச் செல்வதற்குப் பதிலாக, அவர் முதலில் வடக்கு நோக்கி பிலிப்பி நகருக்குச் சென்றார் (நடபடிகள் 20:3, 6), அங்கு அவரது குழுவினருடன் மருத்துவர் லூக்காவும் சேர்ந்து கொண்டார்.*

*பவுல் எருலேசம் சென்று சேர்ந்தபோது, கைது செய்யப்பட்டார் (நடபடிகள் 21:15-26:32). பல ஆண்டுகள் சிறையிருப்பிற்குப் பின்பு (24:27), அவர் இராயனுக்கு அபயமிட்டதினால் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டார் (27:1-28:31). விசாரணைக்காகக் காத்திருக்கையில், அவர் "சிறை நிருபங்களை" எழுதினார். இந்த நிருபங்களில், அவரது சிந்தனைகளில் இருந்து ஒருக்காலும் தொலைவில் இருந்திராத ஒரு சபை இருந்தது, அது பிலிப்பியில் இருந்த சபைக் குழுமம். (எபேசியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன் ஆகியவை மற்ற "சிறை நிருபங்கள்" ஆகும்; எபேசியர் 6:20; கொலோசெயர் 4:3; பிலேமோன் 10 ஆகிய வசனங்களைக் காணவும்.)*

## தூண்டுதல்

*எந்த ஒரு கடிதத்திற்கும் அன்பு என்பது போதுமான தூண்டுதலாக உள்ளது ஆனால் இந்த நிருபத்தை நாம் வாசிக்கையில், பவுலின் சிந்தையில் பல எண்ணங்கள் இருந்தன என்று நாம் முடிவு செய்கிறோம். அவற்றில் ஒன்று, அவர் ரோமாபுரியில் இருக்கையில் பிலிப்பி நகர சபையார் அவருக்கு அனுப்பியிருந்த உதவியாகும். பிலிப்பியர் 1:3ல் பவுல், "சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால்" என்று கூறினார். 4:14ல் அவர், தம்முடன் அவர்கள் உபத்திரவத்தில் உடன்பட்டது பற்றிக் குறிப்பிட்டார். சற்றுகாலத்திற்கு அவர்கள் அவருடனான தொடர்பை இழந்திருந்தனர் என்று தெரியவருகிறது (4:10); ஆனால் அவர் எங்கு இருந்தார் மற்றும் அவரது தேவைகள் என்ன என்பதை அவர்கள் அறிந்தபோது, அவர்கள் தங்கள் சொந்த சகோதரரான எப்பாப்பிராதீத்துவை அவரிடத்திற்கு அனுப்பினர். எப்பாப்பிராதீத்து பிலிப்பி நகரில் இருந்து உதவியைக் கொண்டுவந்தார்; அதற்கு மேலாக அவர், அந்த அப்போஸ்தலருக்குத் தனிப்பட்ட வகையிலும் சேவை செய்திருந்தார் (காண்க 2:25). பிலிப்பியர்கள் அனுப்பிய உதவியை "எப்பாப்பிராதீத்துவின் கையில் வரப்பற்றிக்கொண்ட" தாகவும் அவர்கள் அனுப்பியிருந்த உதவியானது "தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக" இருந்ததாகவும் பவுல் கூறினார் (4:18). பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு "நன்றி" கூறுதல் என்பது இந்த நிருபத்தை எழுதுவதற்கு அப்போஸ்தலர் கொண்டிருந்த நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.*

*எப்பாப்பிராதீத்துவே பவுல் இந்த நிருபத்தை எழுதுவதற்கு இன்னொரு காரணமாக இருந்தார்.எப்பாப்பிராதீத்து ரோமாபுரியில் இருக்கையில், மரணத்திற்கேதுவாக வியாதிப்பட்டார் (2:25, 27, 30). அவரது சுகவீனம் பற்றிய செய்தி பிலிப்பி நகருக்கு எட்டியது, மற்றும் அங்கிருந்த கிறிஸ்தவர்கள் மனக் கலக்கம் அடைந்தனர் (2:26). பவுல் இந்த நிருபத்தை எழுதியதாலும் எப்பாப்பிராதீத்துவை அவர்களிடத்திற்குத் திரும்ப அனுப்பியதாலும், அவர்களின் மனங்களை அமைதியடையச் செய்தார் (2:25, 28). அனேகமாக, எப்பாப்பிராதீத்து பிலிப்பி நகருக்குத் திரும்பிச் சென்றபோது, அவர் இந்த*

நிருபத்தைப் பிலிப்பியர்களுக்கு எடுத்துச் சென்றிருக்கலாம்.

பவுல் பிலிப்பி நகரில் இருந்த சபைபற்றி இன்னொரு அக்கறையும் கொண்டிருந்தார். அவர் அந்த நகரத்தில் துன்பப்படுத்தப்பட்டிருந்தார், மற்றும் உபத்திரவம் தொடர்ந்திருந்தது என்பதற்கு ஆதாரம் இருந்தது, பிலிப்பியர்கள் “[அவர்களை] எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கும்” படி அவர் வேண்டிக் கேட்டுக்கொண்டார் (1:28அ). அவர், “ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு” என்று எழுதினார் (1:29, 30). ஒரு வகையில் பவுல், தமது திட்டங்களை அவர்களுக்குத் தெரிவிப்பதன் மூலம் அவர்களை ஊக்கப்படுத்த முயற்சி செய்தார். அவர் விரைவில் தீமோத்தேயுவை அவர்களிடத்திற்கு அனுப்ப நோக்கங்கொண்டிருந்தார் (2:19-23). மேலும் அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்படலாம் என்றும், தாமே அவர்களிடத்தில் செல்லலாம் என்றும் நம்பிக்கையாயிருந்தார் (1:26; 2:24). “சிறைநிருபங்களில்” மற்றொன்றில் பவுல், தாம் விரைவில் விடுதலை செய்யப்படலாம் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார் (காண்க பிலேமோன் 22).

அதே வேளையில், அவர்களுக்குப் பெலத்தையும் ஆறுதலையும் தருவதற்கு ஒரு செய்தியை அனுப்ப அவர் விரும்பினார். பவுலின் எல்லா நிருபங்களிலும் அவர் வழக்கமாகச் செய்வது போன்றே, அவர்களைப் பாராட்ட (காண்க 1:3-7), அவர்களுக்கு கட்டளையிட (காண்க 2:5), அவர்களை எச்சரிக்க (காண்க 3:2) மற்றும் அவர்களை திருத்த (காண்க 4:2) அவர் வாய்ப்பை எடுத்துக்கொண்டார்.

திருத்துதலின் விஷயம் பற்றி, சில விளக்கவுரையாளர்கள் பிலிப்பி நகரில் இருந்த சபையானது பெரிய ஆவிக்குரிய பிரச்சனைகளைக் கொண்டிருந்தது என்று நம்புகின்றனர். அங்கிருந்த கிறிஸ்தவர்கள் “ஏக சிந்தை” உள்ளவர்களாக இருக்கும்படி பவுல் கட்டளையிட்டார் (2:2), மற்றும் இதை அந்த சபையானது பிரிவினைகளால் நிறைந்து இருந்தது என்பதற்கு ஆதாரமாக விளக்கவுரையாளர்கள் எடுத்துக் கொள்கின்றனர். மேலும் அப்போஸ்தலர், “எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்” என்று தமது வாசகர்களுக்குக் கூறினார் (2:16); எனவே சிலர், அங்கு எல்லா உறுப்பினர்களும் முறையிட்டுக் கொண்டிருந்தனர் என்று முடிவு செய்கின்றனர். இருப்பினும், இந்த நிருபத்தில் உள்ள பல்வேறு தலைப்புகள், எவ்விடத்திலும் உள்ள எந்த சபைக்குழுமத்திற்கு, அந்தப் சபைக்குழுமம் அந்தப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க பிரச்சனைகளைக் கொண்டிருந்தாலும் இல்லை என்றாலும், பயன்நிறைந்த வகையில் பயன்படுத்தப் படமுடியும் (மற்றும் அவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன).

சபைக்குழுமத்தினால் சந்திக்கப்பட்ட ஒரு சில பிரச்சனைகளைப் பவுல் பட்டியலிட்டார்: இரண்டு சகோதரிகள் சமாதானமாக இருக்கவில்லை என்பது தெளிவு (4:2), மற்றும் அந்த சபையானது கள்ளப்போதகர்களுக்கு எதிராகத் தன்னைக் காத்துக்கொள்ளும்படி எச்சரிக்கப்பட்டது (3:2, 18, 19). இருந்தபோதிலும் 1 மற்றும் 2 கொரிந்தியர் நிருபங்களில் பவுல் செய்தது போன்று பிரச்சனைகளின் பெருக்கம் ஒன்றைச் சரிசெய்வதற்காகப்

*பிலிப்பியருக்கு இந்த நிருபத்தை அப்போஸ்தலர் எழுதவில்லை என்று நான் வலியுறுத்துகிறேன். பிரிவினைகள் மற்றும் விரோதங்கள் பற்றிப் பவுலின் கவலைக்கான வெளிப்படையான நோக்கத்தைக் கண்டறிய பவுல் எந்த நகரத்தில் இருந்து எழுதினார் என்பதைத் தவிர வேறு எதையும் நாம் கண்ணோக்கத் தேவையில்லை (காண்க பிலிப்பியர் 1:15, 16). பவுல், ரோமாபுரி சபையில் நிலவிய பிரச்சனைகளை, பிலிப்பி நகரில் இருந்த தமக்கு மிகவும் அன்பான சபையானது அனுபவிப்பதை விரும்பவில்லை.*

இந்த நிருபம், தைரியம், சந்தோஷம், ஐக்கியம் மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றை மூச்சாக வெளியிடுகிறது. இது ஒரு *அன்பின்* கடிதமாக உள்ளது.

## வடிவமைப்பு

இந்த வேளைக்குள் நீங்கள், பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றி மேம்போக்காகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். இந்த அறிமுகக் குறிப்புகளை நிறைவு செய்வதற்கு முன்னர், இந்தப் புத்தகத்தின் [நிருபம்] வடிவமைப்பை நாம் கண்ணோக்குவோமாக.

### ஒரு கடிதம்

முதலாவது, இது ஒரு *கடிதமாக* உள்ளது - மற்றும் இது முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட கடிதங்களின் வழக்கமான பண்புகளைக் கொண்டுள்ளது. இங்கு ஒருசில பொதுவான பண்புகள் குறிப்பிடப்படுகின்றன:

- எழுத்தாளரின் அடையாளப்படுத்துதல்: *"இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும்" (1:1அ).*
- யாருக்கு எழுதப்பட்டதோ அவர்களை அடையாளப்படுத்துதல்: *"பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும்" (1:1ஆ).*
- வாழ்த்துதல்: *"நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" (1:2).*
- நன்றி செலுத்துதல்: *"சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால், நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணி, உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" (1:3-6; அத்துடன் வசனம் 7-11).*
- செய்தி: கடிதத்தின் முக்கிய பொருளுள்ள பகுதி (1:12-4:23) குறிப்பு: கடிதத்தின் முக்கிய பொருளுள்ள பகுதியை, ஆசீர்வாதம் மற்றும் வாழ்த்துக்களின் கூடுதல் வார்த்தைகளுடன் முடிப்பது வழக்கமாக இருந்தது. இதைப் பவுல் செய்தார் (4:21-23).

எழுதியவர் பெயரானது, இன்றைய நாட்களில் நாம் போடும் இடமாகிய,

கடிதத்தின் முடிவில் இருப்பதற்குப் பதிலாகக் கடிதத்தின் தொடக்கத்தில் இருப்பது ஏன் என்று நீங்கள் வியப்படையலாம். அந்த நாட்களில் கடிதங்கள் தோல்சுருள்களில் எழுதப்பட்டன. அந்தத் தோல்சுருள் விரிக்கப்படத் தொடங்கிய உடனே, அதைப் பெற்றுக்கொண்டவர்கள், அதை எழுதியது யார் மற்றும் ஏன் அதை எழுதினார் என்பவற்றை அறிந்துகொள்ளும்படிக்கு, முக்கியமான தகவல்கள் சுருளின் தொடக்கத்திலேயே எழுதப்பட்டுவிடும்.

## பொருளடக்கம்

பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் ஒரு கடிதமாக மாத்திரமல்ல ஆனால் ஒரு தனிப்பட்ட கடிதமாக உள்ளது. இது எந்தவிதமான உறுதியான ஒருங்கமைவும் இன்றி ஒரு கருத்தில் இருந்து இன்னொரு கருத்திற்குக் கடந்து செல்கிறது, அவ்வாறு மாறிச்செல்லுதல் குறித்துச் சிறிதளவே கவலை கொண்டதாக உள்ளது. "நண்பர்களுக்கு இடையிலான முறைசாரா உரையாடலில் இருப்பது போன்று, எவ்விதக் குறிப்புமின்றி கருத்து மாறும் தாராளமான அளவலாவல் போன்றுள்ளது."[7] எனவே, இந்தப் புத்தகம் பற்றிய எந்த வரை குறிப்பும் செயற்கையானதாகவே இருக்க வேண்டும். G. கேம்ப்பெல் மார்கன் என்பவர் "அன்பின் கடிதம் ஒன்றை யார் ஆய்வு செய்ய முடியும்?" என்று கேட்டார்.[8] இருந்தபோதிலும் இந்தப் புத்தகம் பற்றிய உதவிகரமான பல வரைகுறிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு, ஏவன் மலோன் என்பவர் பயன்படுத்திய தரம் வாய்ந்த ஒன்று தரப்படுகிறது:[9]

அதிகாரம் 1: கிறிஸ்து நமது *நோக்கமாக* இருக்கிறார் (காண்க வசனம் 21).
அதிகாரம் 2: கிறிஸ்து நமது *மாதிரியாக* இருக்கிறார் (காண்க வசனம் 5).
அதிகாரம் 3: கிறிஸ்து நமது *பந்தயப்பொருளாக* இருக்கிறார் (காண்க வசனம் 13, 14).
அதிகாரம் 4: கிறிஸ்து நமது *அளிப்பாக* இருக்கிறார் (காண்க வசனங்கள் 13, 19).

(நாம் காணப்போகிறபடி) சிந்தை (சிந்தித்தல்) என்பது இப்புத்தகத்தில் முதன்மை ஆய்வுக் கருத்தாக இருப்பதால், ஒரு எழுத்தாளர் தமது வரைகுறிப்பில் அந்தத் தலைப்பைப் பயன்படுத்தினார்:[10]

அதிகாரம் 1: *ஒரே சிந்தை.*
அதிகாரம் 2: *கீழ்ப்படியும்* சிந்தை.
அதிகாரம் 3: *ஆவிக்குரிய* சிந்தை.
அதிகாரம் 4: *பாதுகாப்பான* சிந்தை.

இருப்பினும், இந்தப் புத்தகத்தின் பொருளடக்கத்தைப் பட்டியலிடுவதே இந்தப் புத்தகத்தைப் படிப்பதற்கான மிகச்சிறந்த அணுகுமுறைகளில் ஒன்றாக உள்ளது:

(1) பவுலின் வாழ்த்து (1:1, 2).
(2) பிலிப்பியர்களுக்காக நன்றி செலுத்துதலும் ஜெபமும் (1:3-11).
(3) பவுல் சிறையில் அடைக்கப்பட்டிருத்தல் - மற்றும் பொதுவாக உபத்திரவம் - பற்றிய உட்கண்ணோக்கு (1:12-30).

(4) கிறிஸ்துவைப் போன்று தாழ்மையும் கீழ்ப்படிதலும் கொண்டிருத்தலின் மூலம் ஐக்கியம் பேணுவதற்காக ஊக்கப்படுத்துதல் (2:1-18). இது இந்த நிருபத்தின் மாபெரும் இறையியல் பகுதியாக உள்ளது.

(5) தீமோத்தேயுவை அனுப்புவதற்கான எதிர்காலத் திட்டம் மற்றும் எப்பாப்பிராதீத்துவை அனுப்புவதற்கான உடனடி திட்டம் (2:19-30).

(6) கள்ளப்போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கைகள், அத்துடன் பின்பற்றத் தகுதியான உதாரணமாகப் பவுல் தம்மையே உயர்த்திப் பிடித்தல் (3:1-21).

(7) பலவகையான புத்திமதிகள் - ஐக்கியத்திற்கு, சந்தோஷத்திற்கு மற்றும் சரியான சிந்தித்தலுக்கு (4:1-9). நம்மில் பலருக்கு, இது இந்த நிருபத்தின் மிகவும் அர்த்தம் நிறைந்த பகுதிகளில் ஒன்றாக உள்ளது.

(8) அவர்களின் கொடைக்காக நன்றி வெளிப்படுத்துதல் அத்துடன் மனநிறைவு பற்றிய போதனை (4:10-19).

(9) முடிவுரை - தனிப்பட்ட வாழ்த்துகள் மற்றும் ஆசீர்வாதத்துடன் (4:20-23).

## ஆய்வுக் கருத்துக்கள்

இந்த நிருபம் சிறிதளவே உள்ளான ஒருங்கமைப்பைக் கொண்டிருப்பதாகக் காணப்பட்டாலும், திரும்பத் திரும்ப வரக்கூடிய ஆய்வுக்கருத்துக்கள் பலவற்றை இது கொண்டுள்ளது. அவற்றில், "ஐக்கியம்" அல்லது "பகிர்ந்துகொள்ளுதல்" என்பது ஒன்றாகும் (காண்க 1:5; 2:1, 25; 4:3, 15). சிந்தை மற்றும் சிந்தித்தல் மீதான வலியுறுத்தம் என்பது இன்னொன்று ஆகும்: நீங்கள் இந்தப் புத்தகத்தை முழுவதும் வாசிக்கும்போது, "சிந்தை," "நடக்கை," "சிந்தித்தல்" (அல்லது "ஆழ்ந்து சிந்தித்தல்") மற்றும் "நினைவில் வைத்தல்" போன்ற வார்த்தைகளைக் காணத்தேடுங்கள். மேலும் உபத்திரவம் மற்றும் பாடுகள் உள்ளான தத்துவம் ஒன்றும் உள்ளது.

"சந்தோஷம்" என்பது மேலாதிக்கம் செலுத்தும் ஆய்வுக்கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் "சந்தோஷத்தின் கீர்த்தனை" என்று அழைக்கப்பட்டுள்ளது.[11] "சந்தோஷம்" மற்றும் "மகிழ்ச்சி" என்ற வார்த்தைகள் இந்தப் புத்தகத்தில் பதினைந்து முறைகள் (KJV வேதாகமத்தில் பதினாறு முறைகள்) காணப்படுகின்றன. இங்கு ஒரு மாதிரி வசனப்பகுதி உள்ளது:

> கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன். உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (4:4-7).

இந்த நிருபத்தில் உள்ள - "நன்றி செலுத்துதல்," "சமாதானம்" மற்றும் "மனநிறைவாயிருத்தல்" போன்ற - கூடுதல் வார்த்தைகள் சந்தோஷம்

என்பதுடன் தொடர்பு கொண்டுள்ளன. அதனால்தான் இந்தப் புத்தகம் பற்றிய நமது படிப்பை நான் "சந்தோஷம் நிறைந்த கிறிஸ்தவம்" என்று அழைக்கிறேன்.

இந்த சந்தோஷம் என்பது "நேர்மறையான மனரீதியான எண்ணப்போக்கின்" விளைவாக மாத்திரம் இருப்பதில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.[12] மாறாக, நமது சந்தோஷம் என்பது *கிறிஸ்துவிற்குள்* வேரூன்றப்பட்டுள்ளது என்பதை இந்தப் புத்தகம் தெளிவாக்குகிறது. "சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து" என்ற ஆய்வுக்கருத்து இந்த நிருபத்தில் ஊடுருவிப் பரவியுள்ளது.

- "கிறிஸ்து" என்ற இயற்பெயரே பதினேழு முறைகள் காணப்படுகிறது (காண்க 1:10).
- "இயேசு" என்ற பெயர் ஒரு முறை காணப்படுகிறது (2:10).
- (கர்த்தர் என்ற வார்த்தையை உள்ளடக்காமல்) "கிறிஸ்து இயேசு" அல்லது "இயேசு கிறிஸ்து" என்ற கூட்டுப்பெயர் பதினாறு முறைகள் காணப்படுகிறது (காண்க 1:1).
- "கர்த்தர்" என்ற பட்டம் ஒன்பது முறைகள் காணப்படுகிறது (காண்க 1:14).
- ("கிறிஸ்து" என்ற வார்த்தையின்றி) "கர்த்தராகிய இயேசு" என்ற கூட்டுப்பெயர் ஒருமுறை காணப்படுகிறது (2:19).
- "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" அல்லது "எனது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" என்ற முழுமையான பட்டப்பெயர் நான்கு முறைகள் காணப்படுகிறது (காண்க 1:2). இந்தப் பட்டப்பெயரானது, இதை "இரட்சகர்" என்ற வார்த்தையை முன்னுரையாகக் கொண்டு பவுல் கூறும் 3:20ல் உச்சகட்டம் அடைகிறது.[13]
- இயேசுவின் மரணம் பற்றிய மறைவான குறிப்புகளும் உள்ளன (காண்க 3:10, 18), அத்துடன் சுவிசேஷம் பற்றிய ஒன்பது குறிப்புகளும் உள்ளன (காண்க 1:5).[14]

"கிறிஸ்துவுக்குள்" அல்லது அதற்குச் சமமான வார்த்தை இந்த நிருபத்தின் திறவுகோல் சொற்றொடராக உள்ளது; இந்தச் சொல்விளக்கம் குறைந்தபட்சம் பதினாறு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது (காண்க 1:1, 26; 4:4). மற்ற குறிப்புகள் NASB வேதாகமத்தில் தெளிவாக இருப்பதில்லை; எடுத்துக்காட்டாக, 1:13ம் வசனம் "*கிறிஸ்துவுக்குள்* எனது கட்டுகள்" என்று நேரடியாக உள்ளது. "கிறிஸ்துவுக்குள்" என்பது பவுலுக்கு மிகவும் பிரியமான சொல்விளக்கங்களில் ஒன்றாகும் (காண்க ரோமர் 3:24; 6:11; 8:1; 9:1). இதை அவர், கர்த்தருடன் நாம் கொண்டுள்ள உறவுமுறை பற்றித் தெரிவிக்கப் பயன்படுத்தினார்.[15] இது நாம் "*அவருக்குள்* இருக்கிறோம்" என்று கூறுவதால் மாத்திரமே கூறப்படக்கூடிய மிகவும் விசேஷித்த, மிகவும் நெருக்கமான, மிகவும் உள்ளார்ந்த உறவாக இருக்கிறது. ஒரு பறவை காற்றில் வாழ்வது போன்று,ஒரு மீன் நீரில் வாழ்வது போன்று, ஒரு மரம் மண்ணில் வேரூன்றி இருப்பது போன்று, ஒரு கிறிஸ்தவர் "கிறிஸ்துவுக்குள்" வாழ்கிறார். ஒரு கிறிஸ்தவர், தம்மைச் சுற்றியுள்ளவர்களில் இருந்து "வேறுபட்டு" இருக்கிறார், ஏனெனில் அவர் இயேசுவின் சுற்றிச்சூழும் பிரசன்னத்தைப் பற்றி எப்போதும் அறிந்திருக்கிறார்!

# முடிவுரை

*சற்றுக் காலத்திற்கு முன்னர், எண்பத்தி எட்டு வயதான எனது தாயாரிடத்தில் நான், பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றி எழுதுதல் எனது அடுத்த திட்டமாக உள்ளது என்று கூறினேன். அவர்களின் முகம் ஒளிவீசிற்று மற்றும் அவர்கள், "அந்தப் புத்தகத்தை நான் நேசிக்கிறேன்!" என்று கூறினார். பின்பு சிந்தனையுடன் கண்ணோக்கி, "ஆனால் அது போதிக்கும் விஷயங்களுக்கு ஏற்ப எப்போதுமே நான் வாழ்வதில்லை" என்பதையும் கூடுதலாகக் கூறினார். அது இந்தப் புத்தகத்தில் என்னைக் குற்றம் சாட்டும் பின்வரும் வசனப் பகுதிகளைப் பற்றி நான் சிந்திக்கச் செய்தது:*

- *''கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்!" (4:4).*
- *''எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" (2:16).*
- *"... ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்" (4:11).*

*இந்தப் புத்தகத்தைப் படித்தல் என்பது எனக்கு ஒரு அறைகூவலாக இருக்கும் - ஒருவேளை உங்களுக்கும் அப்படியே இருக்கும். இருப்பினும் நான், இந்தப் புத்தகம் எச்சரிக்கை விடுக்கும் அறைகூவல்களுடன் ஆச்சரியமான ஆறுதலும் கலந்ததாக இருக்கும் என்று எதிர்நோக்குகிறேன். "சந்தோஷம் நிறைந்த கிறிஸ்தவம்'' பற்றிப் படித்தல் என்பது மன எழுச்சி நிறைந்ததாக இருக்க வேண்டும்!*

---

குறிப்புகள்

[1]*ஒரு வகுப்பறை அமைவில் நீங்கள் இந்த வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள் ஒவ்வொன்றிற்கும் பதிலுரைகளைக் கூறும்படி மாணவர்களைக் அழைக்கலாம். எடுத்துக்காட்டாக, முதல் வார்த்தையை வாசித்தபின் நீங்கள், வகுப்பில் இருப்பவர்கள் பவுலைப் பற்றி அறிந்துள்ளது என்ன என்பதைப் பகிர்ந்து கொள்ளும்படி கேட்கலாம்.* [2]*பல்வேறு நகரங்களை நீங்கள் குறிப்பிடுகையில், வேதாகம இடங்களின் வரைபடத்தில் அவை இருக்கும் இடத்தைச் சுட்டிகாண்பிக்க நீங்கள் விரும்பலாம். இதற்காக ஒரு வரைபடம் இந்தப் புத்தகத்தில் தரப்பட்டுள்ளது.* [3]Avon Malone, *The Book of Philippians* (West Monroe, La.: International Video Bible Lessons, n.d.), 1. [4]Pliny, quoted in Lewis Copeland, *Popular Quotations for All Uses*, rev. ed. (Garden City, N.Y.: Dolphin Books, Doubleday & Co., 1961), 228. [5]*அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை எழுதிய லூக்கா, அப்புத்தகத்தில் இவ்விடம் தொடங்கி, படர்க்கைப் பெயரிலிருந்து ("அவர்கள்"; 16:8 ஐக் கவனிக்கவும்) தன்மைப் பெயருக்கு ("நாங்கள்"; 16:10, 11 ஐக் கவனிக்கவும்) தமது எடுத்துரைப்பை மாற்றியதால், லூக்கா இந்தக் குழுவினருடன் துரோவா நகரில் சேர்ந்து கொண்டார் என்று நாம் அறிகிறோம்.* [6]*பவுல் பிலிப்பி நகரை விட்டு சென்ற பின்பு, லூக்கா தமது எடுத்துரைப்பில் மீண்டுமாகப் படர்க்கைக்குத் ("அவன்," "அவர்கள்") திரும்பியதால், நாம் இந்த முடிவிற்கு வருகிறோம் (கவனிக்கவும் நடபடிகள் 17:1). பவுல் பிலிப்பி நகர் வழியே மறுபடி திரும்பி வரும்வரையிலும், லூக்கா தன்மைப் பெயர்களை ("எங்களுடைய," "நாங்கள்'') பயன்படுத்தவில்லை (கவனிக்கவும் நடபடிகள் 20:6).* [7]Gerald F. Hawthorne,

*Word Biblical Commentary,* vol. 43, *Philippians*, ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), xlviii. [8]G. Campbell Morgan, *Living Messages of the Books of the Bible (*Grand Rapids, Mich.: Baker Book House, 1982), 229. [9]Malone. [10]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 63.

[11]Charles R. Erdman, *The Epistle of Paul to the Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 9. [12]*இப்படிப்பட்ட எண்ணப்போக்கிற்காகக் கடினமாகப் பிரயாசப்படுதலில் மதிப்பு இருக்கையில், இந்தத் தலைப்பின்மீது எழுதப்பட்டுள்ளவற்றில் அதிகமானவை மேம்போக்கானவையும் சுயத்தை மையமாகக் கொண்டவையுமாக உள்ளது. சுயநிறைவு என்பதன் மீதே அடிக்கடி வலியுறுத்தம் இருந்துள்ளது. கிறிஸ்தவர் சுயநிறைவு கொண்டவராக அல்ல ஆனால் தேவனில் நிறைவு கொண்டவராக இருக்கிறார்.* [13]*"கிறிஸ்து" என்பது எபிரெய மொழியில் "மேசியா" என்பதற்குக் சமமான கிரேக்க வார்த்தையாகும். இவ்விரு வார்த்தைகளுமே "அபிஷேகம் பண்ணப் பட்டவர்" என்று அர்த்தப்படுகின்றன. இந்தச் சொற்றொடர் அரசர்களைக் குறிக்க, யூதர்களால் முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டது. "இயேசு" என்பது எபிரெய மொழியில், "யெகோஷ்வா" என்பதன் சுருக்கப் பெயரான "யோசுவா" என்பதற்குச் சமமான கிரேக்க வார்த்தையாகும், இது "யெகோவா இரட்சிக்கிறார்" என்று அர்த்தப்படுகிறது. "கர்த்தர்" என்பது "ஆண்டவர்," "ஆட்சியாளர்" அல்லது "எஜமானர்" என்று அர்த்தப்படுகிற kurios என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [14]*கிறிஸ்துவுடனான நமது உறவை வலியுறுத்த, பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்திலிருந்து கூடுதல் வசனப் பகுதிகள் மேற்கோள் காண்பிக்கப்பட முடியும். நாம் "அவருக்குள்," "அவருடையவர்களாக" மற்றும் "அவருடன்" இருக்கும்படி கூறப்பட்டுள்ளோம்; மேலும் நாம் "அவர் சார்பாக" விஷயங்களைச் செய்கிறோம். நீங்கள் இந்த நிருபத்தை வாசிக்கையில் இவ்வகையான சொற்றொடர்களைத் தேடக் கண்ணோக்குங்கள்.* [15]*2:1ல்* NIV *வேதாகமம் "கிறிஸ்துவுக்குள்" என்பதை "கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்பட்டிருத்தல்" என்று மொழிபெயர்த்துள்ளது.* CJB *வேதாகமம் "கிறிஸ்துவுக்குள்" என்பதை "மேசியாவுடன் ஐக்கியமாயிருத்தல்" என்று சீராக மொழிபெயர்த்துள்ளது.*